# மாலை முரசு

பக்கங்கள் 12

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 05 செவ்வாய்க்கிழமை 22.08.2023 அதிர்வு 22


## 12 வயது பிக்கு கிணற்றில் இருந்து சடலமாக மீட்பு!

மீகவத்தை, நாரங்வல பிரதேசத்தில் அமைந்துள்ள பிரிவேனா ஒன்றில் இருந்த பிக்கு ஒருவர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 04

# ரத்வத்த தோட்டத்தில் அடாவடியில் ஈடுபட்ட

# உதவி முகாமையாளரை உடன் கைது செய்!

### நாடாளுமன்றத்தில் எம்.பிக்கள் போராட்டம்




மாத்தளை, ரத்வத்த தோட்டத்தில் அடாவடியில் ஈடுபட்ட தோட்ட உதவி முகாமையாளர் உடன் கைது செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் இன்று எம்.பிக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மலையக எம்.பிக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் உள்ளிட்டோர் இணைந்து சபைக்கு நடுவில் வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியினரும் போராட்டத்தில் இணைந்துகொண்டனர். 04

## '13' முழுமையாக அமுலாக ஆதரவு வழங்காது மொட்டு

### காமினி லொக்குகே திட்டவட்டம்



"அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுலாக்குவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உடன்படாது. இந்த விடயத்தில் உறுதியான கொள்கையில்தான் எமது கட்சி உள்ளது." 04

## சட்டத்தை கையிலெடுத்து வீட்டை உடைத்தது குற்றம் இல்லையா?

### உதவி முகாமையாளர் கைது செய்யப்படாதமை ஏன் என்று சபையில் மனோ சீற்றத்துடன் வினா



"மாத்தளை, ரத்வத்த தோட்டத்தில் சட்டத்தைக் கையில் எடுத்த உதவி முகாமையாளர் கைது செய்யப்படாதமை ஏன்?"

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கேள்வி எழுப்பினார்.

மாத்தளை மாவட்ட எல்கடுவ பெருந்தோட்ட ரத்வத்த தோட்ட விவகாரம் தொடர்பில் இன்று நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட அமளியின் போது, இடைமறித்து சபாநாயகரின் அனுமதியுடன் மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது:- 04

## யாழ். ஆஸ்பத்திரியில் குருதிக்குத் தட்டுப்பாடு




யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் அனைத்து வகையான குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதென இரத்த வங்கி அறிவித்துள்ளது.

நாளுக்கு நாள் குருதி விநியோகம் அதிகரித்துச் செல்வதினால் இதனால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்க முடியாதுள்ளது.

"18 - 55 வயதிற்கு இடைப்பட்ட, 50 கிலோவுக்கும் அதற்கு மேற்பட்ட நிறையும் கொண்ட ஆண், 04

## தண்ணிமுறிப்புக் குளச் சர்ச்சை; 46 மீனவரும் இன்று விடுதலை!

தண்ணிமுறிப்புக் குள சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட 46 மீனவர்களும் இன்றையதினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.பிரதீபன் தலைமையில்இந்த வழக்கு இன்றைய தினம் எடுத்து கொள்ளப்பட்ட போது பெரும்பான்மையினத்தை சேர்ந்த மீனவர்கள் சார்பாக மன்றில் தோன்றிய சட்டத்தரணி அத்துமீறிய சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட மாட்டோம் என்ற உத்தரவாதத்தை மன்றுக்கு வழங்கியிருந்தார். அதன்பின்னர் நீதிபதி 04

### தன்னிச்சையாகச் செயற்படும்

# தோட்ட உரிமையாளர்களுக்கு எதிராக விரைந்து உரிய நடவடிக்கை எடுங்கள்

## சபையில் அமைச்சரிடம் சபாநாயகர் வலியுறுத்து

"எமது மாவட்டத்திலும் (மாத்தறை) தோட்டப் புறங்களில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. தோட்ட உரிமையாளர்கள் தன்னிச்சையாகச் செயற்படுகின்றார்கள். ஆகவே, இப்பிரச்சினைகள் குறித்து உடனடியாக உரிய நடவடிக்கை எடுங்கள்."

– இவ்வாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, பெருந்தோட்டத் துறை அபிவிருத்தி அமைச்சர் ரமேஷ் பதிரணவிடம் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இன்று, மாத்தளை – ரத்வத்த தோட்டத்தில் தற்காலிக குடியிருப்பு ஒன்றை அந்தத் தோட்டத்தின் உதவி முகாமையாளர் பலவந்தமான முறையில் அகற்றிய சம்பவம் தொடர்பில் விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர் ரமேஷ் பத்திரண விசேட உரையாற்றினார். அமைச்சரின் உரையைத் தொடர்ந்து சபாநாயகர் மேற்கண்டவாறு கோரிக்கையை முன் வைத்தார்.

சபாநாயகர் மேலும் தெரிவித்ததாவது:-

"இவ்வாறான பிரச்சினைகள் எமது மாவட்டத்திலும் (மாத்தறை) இடம்பெறுகின்றன. தோட்ட உரிமையாளர்கள் தன்னிச்சையான முறையில் செயற்படுகின்றார்கள். அவர்கள் தோட்ட மக்களை இருக்க விடுவதில்லை. மின்சாரம், நீர் உள்ளிட்ட வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அவர்கள் தடைகளை ஏற்படுத்தியுள்ளார்கள்.

ஆகவே, எமது மாவட்டத்தில் உள்ள தோட்ட புற மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்து உடனடியாக உரிய நடவடிக்கை எடுங்கள்." – என்றார்.

# குருந்தூர்மலை விவகாரத்தில் தமிழ்க் கட்சிகள் இனவாதமாம்

## சீறுகின்றார் மொட்டு எம்.பி.



குருந்தூர்மலை விவகாரத்தைப் பயன்படுத்தி நாட்டில் இனவாதத்தைப் பரப்புவதற்குத் தமிழ்க் கட்சிகள் முற்படுகின்றன என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில் –

"நாட்டில் மீண்டும் இனவாதம் தலைதூக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு வருகின்றன. இப்பிரச்சினையைத் தொடர்வதற்கு இடமளிக்கக்கூடாது என அரசிடம் கூறியுள்ளோம். அதற்கு முடிவு கட்டப்பட வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ போரை முடிவுக்குக் கொண்டு வந்தார். அதனால் தோட்டப் பகுதிகளில் உள்ள தமிழர்களுக்குக் கூட அடையாள அட்டை இன்றி நகரப் பகுதிகளுக்கு வர முடிகின்றது. போர்க் காலத்தில் அவ்வாறான சூழ்நிலை இருக்கவில்லை. எனவே, இந்நாட்டில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அச்சமின்றி வாழ்வதற்குரிய சூழலை மஹிந்த ராஜபக்ஷவே ஏற்படுத்திக் கொடுத்தார்.

தமிழ் சகோதரர்களுக்கு அல்ல, தமிழ்க் கட்சிகளுக்கே இனவாதத்தை பரப்ப வேண்டிய தேவை உள்ளது. அதனால்தான் பிரச்சினைகளைத் தோளில் சுமக்கின்றனர். தெற்குக்கும் தவறான செய்தியை வழங்குகின்றனர்." – என்றார்.






# கொட்டடி இளைஞர் படுக்கையில் மரணம்

யாழ்ப்பாணத்தில் உணவருந்தி விட்டுப் பின்னர் படுக்கைக்குச் சென்ற இளைஞன் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த மிதுன்ராஜ்(வயது 31) எனும் இளைஞனே முன்னிரவு உணவருந்தி விட்டு உறங்கச் சென்ற சமயம் உயிரிந்துள்ளார்.

இவர் தனது வீட்டில் நேற்று திங்கட்கிழமை வழமை போன்று இரவு உணவை அருந்தி படுக்கைக்குச் சென்றுள்ளார்.

எனினும், நீண்டநேரமாக அவர் கட்டிலில் அசைவின்றி காணப்பட்டமையை அடுத்து, சந்தேகம் கொண்ட தாயார் அவரை எழுப்ப முயற்சித்துள்ளனர்.

அவர் எழும்பாத காரணத்தால் பதற்றமடைந்த பெற்றோர் அவரை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டார் எனத் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, அவரது சடலம் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சட்டத்தை கையியெடுத்து...

“அப்பாவித் தொழிலாளர் குடும்பத்தின் மீது மனிதபிமானமற்ற முறையில் அராஜகம் புரிந்து, குழந்தை அழுகின்ற வேளையிலும், வீட்டை உடைத்து துவம்சம் செய்த மாத்தளை, ரத்வத்த தோட்ட உதவி முகாமையாளர் இடமாற்றம்தான் செய்யப்பட்டுள்ளாராம். பணி நீக்கம் செய்யப்படவில்லையாம். நாடாளுமன்றத்தில் இன்று எமது ஆர்ப்பாட்டத்துக்குப் பதில் அளித்த பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண இந்தத் தகவலைக் கூறினார்.

அப்படியானால், யாரை ஏமாற்ற இந்த நாடகம் போட்டீர்கள்? அத்துமீறிய குடியேற்றமாக இருந்தாலும் அதை சட்டப்படித்தான் அணுக வேண்டும் என அமைச்சரே கூறுகின்றார். அப்படியானால் சட்டத்தைக் கையிலெடுத்து வீட்டை உடைத்தது குற்றம் இல்லையா?

இங்கே அரசு தரப்பினர் தங்கள் அமைச்சர்தான் முதலில் அங்கே போனார் என்றும், நான் போகவில்லை என்றும் கூறுகிறீர்கள். நான், அன்று முல்லைத் தீவில் இருந்தேன். உங்கள் அமைச்சர் அங்கே போனது நல்லதுதான். ஆனாலும் அங்கே போய் சும்மா சண்டை போட்டு என்ன பயன்? எதுவுமே நடக்கவில்லை.

நான் 19ஆம் திகதி நள்ளிரவு ஒரு மணியளவில், முல்லைத்தீவில் இருந்து பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரணவிடம் பேசினேன். மாத்தளை மாவட்ட எம்.பி. ரோஹினி கவிரத்னவிடம் பேசினேன். கந்தேநுவர பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் பேசினேன். இதற்கு மேல் அங்கே போய் நானும் சண்டை போட்டிருக்க வேண்டும் என நீங்கள் கூறுகிறீர்களா?

நான் மனோ கணேசன். சிவாஜி கணேசன் இல்லை. ரஜனிகாந்த்தும் இல்லை. அஜித்குமாரும் இல்லை. அங்கே போய் சண்டைபோட்டு அதை வீடியோவில் போட்டு நான் காட்டவில்லை. கடைசியில் அப்படியே சண்டை போட்டும் என்ன பயன்? ஒன்றும் இல்லை.

நானும் நமது மக்களிடம் அடித்தால் திருப்பி அடியுங்கள் என்று கூறினேன். அது சட்டப்படி நியாயமானது. இங்கே பிரதமர் இருக்கின்றார். அவரது குணவர்த்தன வீட்டை எரித்தார்கள். அமைச்சர் பிரசன்ன வீடும், அமைச்சர் ரமேஷ் பத்திரண வீடும் எரிக்கப்பட்டன. அவை பிழையான காரியங்கள். ஆனால், அவை எரிக்கப்பட்ட போது உங்களிடமும் ஒரு கூட்டம் இருந்திருந்தால், நீங்கள் கட்டாயம் திருப்பி அடித்திருப்பீர்கள். அது நியாயம் தானே? தற்பாதுகாப்புத் தானே?

நமது மக்கள் திருப்பி அடிக்கவில்லை. அதைப் பலவீனமாக நினைக்க வேண்டாம். அன்று இங்கே நாம் முழுநாள் விவாதம் நடத்தினோம். ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்று எல்லோரும் ஆதரவாக பேசினீர்கள். அது நடந்து ஒரு வாரத்துக்குள் இந்தப் பிரச்சினை. அதில் நான் ஒன்று சொன்னேன். அமைச்சரே, அது உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என எண்ணுகிறேன். அன்றைய பிரிட்டிஷ் வெள்ளையர் ராஜ்யம் இன்று பெருந்தோட்ட கறுப்பு ராஜ்யமாக மாறி உள்ளது. அவ்வளவுதான் மாற்றம்.

இந்தப் பெருந்தோட்ட நிலங்கள், பெருந்தோட்டநிறுவனங்களுக்கு சொந்தம் இல்லை. அவர்கள் அங்கே நீண்ட குத்தகையில்தான் இருக்கிறார்கள். நாம் இலங்கையர். எமது பிரஜா உரிமை முழுமை அடையவில்லை. நாம் இலங்கைக்கு உள்ளேயே எமது பிரச்சிகளை தீர்க்க முயல்கிறோம். தயவு செய்து இந்த பிரச்சினையை இலங்கை பிரச்சினையாகப் பாருங்கள்.

நாம் அரசியல் செய்வதாக இங்கே ஒரு அமைச்சர் குற்றம் சாட்டுகிறார். இது சட்டப் பிரச்சினை என்கிறார். அவரது பேச்சையிட்டு நான் வருந்துகிறேன். இது எமது மக்களின் மனிதாபிமானப் பிரச்சினை.

நாம் அரசியல் செய்யவில்லை. நாம் 2015இல் ஆட்சிக்கு வந்து 4 வருடங்களில் பல காரியங்களைச் செய்துள்ளோம். அதற்கு முன் ஜெயவர்தன, பிரேமதாஸ, சந்திரிகா, ராஜபக்ஷ, விக்கிரமசிங்க அரசுகளில் பங்காளியாக 40 வருடங்கள் இருந்தவர்கள், செய்தவர்கள் செய்தவற்றை விட பலமடங்கு அதிகம் நாம் செய்துள்ளோம்.” – என்றார்.

### தண்ணிமுறிப்பு...

நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட மீனவர்கள் 46 பேரையும் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்ட குமுழமுனை தண்ணிமுறிப்பு மக்களுக்கும், ஹிச்சிராபுரம் மக்களுக்குமே அனுமதி உள்ள நிலையில் வெலிஓயா பகுதியிலிருந்து வந்த பெரும்பான்மையினர் கடந்த 4 ஆம் திகதியன்று அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டமையைத் தொடர்ந்து மீனவ சங்கத்தினருக்கும், பெரும்பான்மையின மக்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டிருந்தது.

தண்ணிமுறிப்பு குளத்தில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 38 சிங்கள மொழி பேசும் மீனவர்களையும் , அவர்கள் மீன்பிடிக்கு பயன்படுத்திய உபகரணங்களையும் அந்தப் பகுதி மக்களால் ஒட்டுசுட்டான் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அந்தச் சந்தேக நபர்களில் ஒன்பது பேர் பொதுமக்களால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் தப்பி சென்றிருந்தனர்.

இந்நிலையில். பதிவு செய்யப்பட்ட ஹிச்சிராபுரம், தண்ணிமுறிப்பு சங்கத்தினை சேர்ந்த மீனவர்களை விசாரணைக்கு என அழைக்கப்பட்ட நிலையில் 17 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதனையடுத்து இந்த வழக்கு கடந்த 8 ஆம் திகதி நீதிமன்றுக்குக் கொண்டு–வரப்பட்டது. கைது செய்யப்பட்டவர்கள் அதன்போது இன, மத கலவரத்தை ஏற்படுத்தியவர்கள் எனப் பொலிஸாரால் குற்றம் சுமத்தப்பட்ட பின்னர் 14 நாள்கள் தடுப்புகாவலில் வைக்க உத்தரவிடப்பட்டிருந்தது.

அவர்கள் அனைவரும் இப்போது விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தண்ணிமுறிப்பு நன்னீர் மீன்பிடியால் தமிழ் மற்றும் சிங்கள மீனவர்களுக்கு இடையில் முறுகல் நிலை அவ்வப்போது தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### யாழ். ஆஸ்பத்திரியில்...

பெண் இருபாலாரும் எவ்வித பிரச்சனையுமின்றி இரத்ததானம் செய்யலாம்.

‘ஏற்கனவே இரத்ததானம் செய்தவர்கள் எவ்வித நோய்களுமின்றி இருந்தால் 60 வயது வரை இரத்ததானம் செய்யலாம்.

‘எனவே தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு ஏற்கனவே இரத்ததானம் செய்து நான்கு மாதங்கள் நிறைவடைந்தவர்களும் புதிதாக இரத்ததானம் செய்ய விரும்புவர்களும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு வருகை தந்து இரத்ததானம் செய்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் உங்கள் ஊர்களிலும் இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்து எமக்கு அறிவித்தால் நாம் வருகை தந்து குருதியை சேகரிக்கும் பணிகளை முன்னெடுப்போம்.

‘எம்முடன், 0772105375 அல்லது 0212223063 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ள முடியும்.” – என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

### ரத்வத்த தோட்டத்தில்...

அதேவேளை, அந்தத் தோட்ட உதவி முகாமையாளர் உடன் கைது செய்யப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் சபையில் இன்று உரையாற்றும்போது வலியுறுத்தினார்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய வடிவேல் சுரேஷ் எம்.பி.–

“மாத்தளை, ரத்வத்த தோட்டத்தில் உதவி முகாமையாளர் ஒருவரால் வீடொன்று அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் கதறி அழுதனர். சமைத்து உணவுகூட வீசப்பட்டுள்ளது. இது மிகவும் கொடூரமாகும். அவர் உடன் கைது செய்யப்பட வேண்டும்.” – என்று வலியுறுத்தினார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வீ. இராதாகிருஷ்ணனும் இந்த வலியுறுத்தலை விடுத்தார்.

அதன்பின்னர் மலையக எம்.பிக்கள், கூட்டமைப்பு எம்.பிக்கள் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் இணைந்து சபைக்கு நடுவில் வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### 12 வயது பிக்கு...

12 வயதுடைய பிக்குவே நேற்று இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீகவத்தை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரிவெனாவில் குறித்த பிக்கு இல்லாததால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது அவர் கிணற்றுக்குள் விழுந்து கிடந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

எனினும், கிணற்றில் இருந்து உயிரிழந்த அவரின் சடலத்தையே மீட்க முடிந்தது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மீகவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### ‘13’ முழுமையாக...

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“13 தொடர்பில் இரட்டை நிலைப்பாட்டில் நாம் இல்லை. ஒரேயொரு நிலைப்பாட்டில்தான் நாம் இருக்கின்றோம். அதாவது 13 ஐ வழங்குவதற்கு எமது கட்சி உடன்படாது. இந்த விடயத்தில் எமது கட்சியின் கொள்கை மாறாது.

இது சம்பந்தமாக ஜனாதிபதியுடன் பேச்சுநடத்தவும் தயாராகவுள்ளோம். யோசனைகளும் முன்வைக்கப்படும்.”– என்றார்.



# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வுப் பணிக்கான நிதி வந்து சேர்ந்தது

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுக்கான நிதி விடுவிப்பு நீண்ட இழுபறியில் இருந்து வந்த நிலையில், நீதி அமைச்சு அதற்குரிய முதற்கட்ட நிதியை விடுவிக்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு நேற்று (21) இது தொடர்பில் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கொக்குத்தொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழியை அகழ்வதற்குரிய நிதியைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல் நிலைமை நீடித்திருந்தது.

இதன் காரணமாக இரண்டு தடவைகள் அகழ்வு நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் கூட்டமும் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் தொடர் முயற்சி காரணமாக நீதி அமைச்சு நிதியை விடுவிக்க இணங்கியுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அ.உமா மகேஸ்வரன் தெரிவிக்கையில்–

“கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணிகளை முன்னெடுப்பதற்கு உரிய நிதியை வழங்க அனுமதி கிடைத்துள்ளது.

நேற்று (21) நீதி அமைச்சின் செயலாளருக்கு அனுமதி வழங்கப்பட்ட நிதியை மாவட்ட செயலகத்துக்கு விடுவிக்குமாறு கோரி கடிதம் அனுப்பியுள்ளேன்.

நிதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு விடுவிக்கப்பட்டவுடன் அகழ்வு பணிகள் ஆரம்பமாகும்.

சுமார் ஐந்து மில்லியன் ரூபா இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட சட்டமருத்துவ நிபுணர் கனகசபாபதி வாசுதேவா தலைமையில் பிற திணைக்களங்களும் இணைந்து அகழ்வு பணிகள் இடம்பெறவுள்ளன.” – என்றார்.


# நினைவகலா நினைவுகள்



பிறப்பு 21 * 10 * 1937

இறப்பு 23 * 08 * 2012

**இந்திரராசா செங்காரபிள்ளை**
(சங்கர்)



பிறப்பு 11 * 02 * 1936

இறப்பு 29 * 08 * 2009

**செங்காரபிள்ளை பூரணபாக்கியம்**

நேற்று வரை எம்முடன் வாழ்ந்தீர்கள் என்றே
உள்ளத்து உணர்வலைகள்
ஆசையுடன் அசைபோடுகின்றன - என்றாலும்
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை இறைஞ்சி அஞ்சலிக்கின்றோம்.

505, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மொட்டுக் கொடுக்கும் முட்டு

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் முழு நடைமுறையாக்கம் என்பது சாத்தியமேயற்றது என்று நன்கு தெரிந்து கொண்டுதான் - அதை முழுமையாகப் புரிந்து கொண்டுதான் - அது பற்றிய அறிவிப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்தார். அவர் எதிர்பார்த்தபடியே அது சாத்தியமற்றது என்பது நடைமுறையில் தெளிவாகி வருகின்றது என்று உண்மை நிலையை அம்பலப்படுத்தியிருக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

பொதுஜன பெரமுனவின் - மொட்டுக் கட்சியின் - அதிருப்திக்குழு நாடாளுமன்ற உறுப்பினரான அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போது எடுத்திருக்கின்ற சில முக்கிய முடிவுகளுக்கு - தீர்மானங்களுக்கு - அவரை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்து, அவரது அரசுக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கும் மொட்டுக் கட்சி பொறுப்பேற்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

நாட்டின் பாதுகாப்புக் கொள்கை திட்டம் பரந்த அளவில் மறுசீரமைக்கப்படப் போகின்றது என்று முன்னறிவித்தல் கொடுத்திருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் மிக முக்கியமான - கேந்திர முக்கியத்துவம் மிக்க - சொத்துக்களைத் தனியாருக்கு விற்பதற்கு முடிவு எடுத்திருக்கையில், நாட்டின் பாதுகாப்பு அதனால் கேள்விக்குள்ளாகி இருப்பதாக பேராசிரியர் பீரிஸ் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

ஒரே சமயத்தில் நிதி மற்றும் பாதுகாப்பு ஆகிய இரண்டு முக்கிய அமைச்சுகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே தம் கைவசம் வைத்துள்ளார்.

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நாட்டின் தொலைத் தொடர்புக் கட்டமைப்பின் கேந்திர முக்கியத்துவமான மையம். அத்தோடு நாட்டின் தேசிய எரிவாயு விநியோகஸ்தர்களான லிட்ரோ நிறுவனத்தின் 99 வீதமான பங்குகளை வைத்திருக்கின்றது ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கம்பெனி.

இந்த இரண்டையும் - ஸ்ரீலங்கா ரெலிக்கொம் மற்றும் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் ஆகிய இரண்டு கேந்திர முக்கியத்துவம் மிக்க நிறுவனங்களையும் - தனியார் மயப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இப்படி நாட்டின் பாதுகாப்புக்கு முக்கியமான இரண்டு கட்டமைப்புகள் மீதான கட்டுப்பாட்டை அரசாங்கம் இழக்கும் விதத்தில் அவற்றைத் தனியாருக்கு விட்டுவிட்டு - விற்றுவிட்டு - தேசியப் பாதுகாப்பு மறுசீரமைப்பு என்பது அபத்தமான நடவடிக்கை - கேலிக்கூத்துச் செயற்பாடு - என்று பேராசிரியர் பீரிஸ் விமர்சிப்பதில் நியாயம் இல்லாமலில்லை.

பாதுகாப்புத் துறை விடயங்கள் தொடர்பான நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவின் தலைவர் முன்னாள் கடற்படை அதிகாரியான ரியல் அட்மிரல் சரத் வீரசேகரா எம்.பி., அவர் முன்னர் நாட்டின் பொதுஜன பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்தவர். அவர் தலைமையிலான பாதுகாப்புத் துறை நாடாளுமன்ற மேற்பார்வைக் குழு ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மை தனியார் மயப்படுத்த அனுமதிப்பது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என அறிக்கை தந்துள்ளது.

அவற்றையெல்லாம் புறம் ஒதுக்கி விட்டு, எதேச்சாதிகாரமான முடிவுகளை எடுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மொட்டுக் கட்சி கண்மூடித்தனமான முண்டு - முட்டு - கொடுக்கின்றது என்று பீரிஸ் குற்றம் சுமத்துகின்றார். ரணில் விக்கிரமசிங்கவின் அத்தகைய நடவடிக்கைகளின் விளைவுகளுக்கு மொட்டுக் கட்சி பொறுப்பேற்க வேண்டும் என அவர் முற்கூட்டியே எச்சரிப்பதில் அர்த்தங்கள் பொதிந்துதான் உள்ளன.

## பங்களாதேஷ் வழங்கியிருந்த கடனில் கால் பகுதியை திருப்பியது இலங்கை

பங்களாதேஷ் இலங்கைக்கு வழங்கிய 200 மில்லியன் டொலர் கடனில் ஒரு பகுதியாக 50 மில்லியன் டொலர்கள் மீளச் செலுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் வங்கி ஓகஸ்ட் 17 அன்று செலுத்தலின் முதல் தவணையைப் பெற்றது என்று மத்திய வங்கியின் நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை, ஓகஸ்ட் 30 ஆம் திகதிக்குள் மற்றொரு தவணைக் கடனைச் செலுத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இரண்டாவது தவணையாக இலங்கை எவ்வளவு செலுத்தும் என்று அவர் தெரிவிக்கவில்லை. இந்த ஆண்டு செப்ரெம்பருக்குள் 200 மில்லியன் டொலர் தொகையை நாடு செலுத்திவிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், பங்களாதேஷ் நாணய மாற்று ஒப்பந்தத்தின் கீழ் மூன்று தவணைகளில் கடந்த வருடம் இலங்கைக்கு பணத்தைக் கடனாக வழங்கியது.

முதல் தவணை 50 மில்லியன் டொலர் ஓகஸ்ட் 19 அன்று அனுப்பப்பட்டது. இரண்டாவது தவணை 100 மில்லியன் டொலர் ஓகஸ்ட் 30 அன்றும் மற்றும் மீதமான 50 மில்லியன் செப்ரெம்பர் மாதமும் அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: மீட்கப்பட்ட ஆயுதங்கள் அழிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர், பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்டு, பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்கள் ஆழ்கடலில் மூழ்கடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

ஆயிரம் வாள்கள், வெடிகுண்டு துண்டுகள், ஈட்டி ஆயுதங்கள் ஆகியவை நீதிமன்ற உத்தரவுப்படி ஆழ்கடலில் மூழ்கடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

கடற்படை அதிகாரிகளுடன் சுரனிமலை கப்பலை கடற்படையினர் நீதித்துறை அதிகாரிகள், ஆயிரம் கடல் மைல் தொலைவிலும், ஆயிரம் அடி ஆழத்திலும் ஆழ்கடலில் இந்த ஆயுதங்களை மூழ்கடித்து அழித்துள்ளனர்.

பிரதம நீதிவான் பிரசன்ன அல்விஸின் உத்தரவுக்கமைய, மேலதிக நீதிவான் பசன் அமரசிங்க, நீதிமன்ற பதிவாளர், வழக்குகளின் பாதுகாவலர் மற்றும் நீதிமன்ற ஊழியர்களின் மேற்பார்வையின் கீழ் இந்த ஆயுதங்களை மூழ்கடித்து அழித்துள்ளனர்.

இதன் மூலம் ஆயிரம் வாள்கள், கத்திகள், நுனி ஆயுதங்கள், வெடிகுண்டு பாகங்கள், 10 துப்பாக்கிகள் என்பன அழிக்கப்பட்டுள்ளன.

## 8 லட்சத்து 60 ஆயிரம் சுற்றுலா பயணிகள் இந்த வருடத்தில் இலங்கைக்கு வருகை!

இந்த வருடம் 8லட்சத்து 60 ஆயிரத்துக்கும் அதிகமான வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த மாதம் கடந்த 20 நாள்களில் 98 ஆயிரத்து 831 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர்.

சுற்றுலா பயணிகளில் இந்தியாவிலிருந்து 19 ஆயிரத்து 804 சுற்றுலா பயணிகளும், பிரித்தானியாவிலிருந்து 12 ஆயிரத்து 188 சுற்றுலா பயணிகளும் பதிவாகியுள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி, இதுவரை 8 லட்சத்து 66 ஆயிரத்து 744 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

அந்தவகையில், இந்தியாவில் இருந்து அதிகஎண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். சீனாவில் இருந்தும் 35 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் இந்த ஆண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.



# நாட்டில் போதைப்பொருள் அச்சுறுத்தலை கட்டுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல்

இலங்கையில் வேகமாகப் பரவி வரும் போதைப்பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதனை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழிப்பதற்கும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பொறிமுறைகளைக் கண்டறிவது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தக் குழு பொது பாதுகாப்பு அமைச்சர் திரான் அலஸ் தலைமையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் கூடிய போது மேற்படி விடயம் தொடர்பில் கலந்தாய்வு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை பொலிஸார், தேசிய ஆபத்தான போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபை இந்தக் குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்டு, நாட்டில் போதைப்பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த திணைக்களங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது நாட்டில் போதைப்பொருளை கட்டுப்படுத்துவதற்காக சிரேஷ்ட பிரதி காவல்துறை மா அதிபர் தேஷ்பந்து தென்னகோன் தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று குழுவின் தலைவர் அமைச்சர் அலஸ் தெரிவித்துள்ளார்.

பெரியளவில் போதைப்பொருள் நாட்டுக்குள் கொண்டுவரப்படுவதை நிறுத்துவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று இலங்கை பொலிஸ் சார்பில் ஆஜரான அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதற்கு அயல் நாடுகளின் புலனாய்வு அமைப்புகளும் துணை நிற்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையை பிரதி நிதித்துவப்படுத்தும் அதிகாரிகள், புகையிலை மற்றும் மதுபான பாவனையை குறைப்பதற்கு எடுக்கக்கூடிய சில ஆலோசனைகளை குழுவிடம் முன்வைத்துள்ளனர்.

போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க தேசிய ஆபத்தான போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபை செயல்பட்டு வருகிறது என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் போதைப் பொருள் கட்டுப்பாடு தொடர்பான யோசனைகளை முன்வைத்ததோடு, உறுப்பினர்களின் முன்மொழிவுகளை கவனத்தில் கொண்டு தற்போதைய துறைகளின் முன்மொழிவுகள் அடங்கிய அறிக்கையை குழுவிடம் வழங்க வேண்டும் என குழுவின் தலைவர் டிரன் அலஸ் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி, நாடாளுமன்ற உறுப்பினர்களான புத்திக பத்திரன, ஜயந்த சமரவீர, உபுல் கலப்பத்தி, உபுல் மகேந்திர ராஜபக்ஷ, ராஜிகா விக்கிரமசிங்க மற்றும் மஞ்சுளா திஸாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மருந்து ஒவ்வாமை காரணமாக மற்றொரு குழந்தை உயிரிழப்பு

## கொழும்பில் பெற்றோரது குற்றச்சாட்டை மறுக்கும் வைத்தியசாலை

கொழும்பு, ரிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குழந்தை மருந்தொன்று வழங்கப்பட்டதன் பின்னர் நோய் தீவிரமடைந்து உயிரிழந்துள்ளதாக பெற்றோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அவிசாவளை - எபலபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த எட்டு மாத குந்தையான டெஷான் விதுநெத், திடீர் சுகயீனம் காரணமாக ஒகஸ்ட் 4 ஆம் திகதி அவிசாவளை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன்பின்னர், மேலதிக சிகிச்சைக்காக ஒகஸ்ட் 5 ஆம் திகதி கொழும்பு, சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதன்போது குழந்தைக்கு நோய் உறுதி செய்யப்படாமல் யூகத்தின் அடிப்படையில் வலிப்பு எதிர்ப்பு மருந்து வழங்கி மருத்துவர்கள் சிகிச்சையளித்தனர் என்று பெற்றோர் குற்றம் சாட்டுகின்றனர்.

இதனை தொடர்ந்து தீவிர சிகிச்சை பெற்று வந்த குழந்தை டெஷான் கடந்த 19 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில், டெஷானின் உடல் நேற்று பிற்பகல் குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மருந்து ஒவ்வாமை காரணமாக குழந்தை உயிரிழந்ததாக கூறப்படும் குற்றச்சாட்டை ரிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜி.விஜேசூரிய மறுத்துள்ளார்.

# வர்த்தகரின் மகன் சடலமாக மீட்பு!

யாழின் வர்த்தகர் ஒருவரின் மகன் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

32 வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவர் கொட்டடியில் உள்ள அவரது வீட்டில் நேற்று (21) மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞன் ஐஸ் போதைப் பொருளை அதிகளவில் பாவித்த நிலையில் உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் மீட்கப்பட்ட சடலம் யாழ். போதான வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இன்று சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது. அதன் பின்னரே உயிரிழப்புக்கான உறுதியான காரணம் வெளிவரும் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# குடுமி மலைப் பிரதேசத்தில் சமூக சேவைத் திட்டம்!

## இராம கிருஷ்ண மிசன் சுவாமி ஜீவனானந்தா நடவடிக்கை



**(வி.ரி.சகாதேவராஜா)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் அடிப்படை வசதிகளற்ற மிகவும் பின்தங்கிய குடுமி மலைப் பிரதேசத்தில் இராம கிருஷ்ண மிசன் சுவாமி ஜீவனானந்தா சமூக சேவைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்.

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப் புக் கிளை தன்னுடைய நூற்றாண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் பயணத்தில் தற்போது 96 வருடங்களைப் பூர்த்தி செய்து இருக்கின்றது.

அது சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் 125 ஆண்டுகள் பூர்த்தியானதைக் கொண்டாடும் வகையில் 'சுவாமி ஜீவனானந்த சமூக சேவை திட்டம்' என்னும் கிராம நல திட்டத்தை, கிராமங்கள் தோறும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனின் வளர்ச்சிக்கு அளப்பரிய சேவை யாற்றிய முன்னாள் பொது முகாமை யாளர் ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தா ஜீ மகராஜின் ஞாபகார்த்தமாக இந்தச் சேவை நலத் திட்டம் தற்போதைய பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜால் பிரஸ்தாபித்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மிகவும் பின்தங்கிய சேவைகள் தேவையான பிரதேசங்களில் இந்தச் சமூக சேவைத் திட்டத்தை அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் முதல் கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரைப் பகுதியில் 3 கிராமங்களும், சித்தாண்டியை ஒட்டிய பெரிய வட்டுவான், ஈரளக் குளம் போன்ற நான்கு கிராமங்கள் இந்த சேவைப் பணிகளில நடைபெற்று வருகின்றன.

இதன் தொடர்ச்சியாகக் குடுமிமலை பிரதேசத்தில் உள்ள ஆறு குக்கிராமங்கள் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அங்கு மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரமத்தின் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையிலான தொண்டர் குழுவினர் அண்மையில் அங்கு விஜயம் செய்தனர்.

அங்கு சுவாமி கிராம மட்டத்தில் பொதுமக்களைச் சந்தித்து கலந்துரையாடினர்.

அங்கு அடிப்படைக் குடி தண்ணீர் வசதிகள், அறநெறிப் பாடசாலைகள், மாதந்தோறும் மருத்துவ முகாம்கள், பாடசாலை இடை விலகலைத் தடுக்கும் வண்ணமாக ஆறாம் ஆண்டுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கான மேற்படிப்பு வசதிகள் மற்றும் அங்கிருந்து முதன் முறையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவிகளுக்கான உதவித்தொகை போன்ற விடயங்கள் தொடர்பில் திட்டமிடப்பட்டுள்ளன.

வருங்காலங்களில் சுயதொழில் வாய்ப்பை முன்னிறுத்திப் பயிற்சிகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தச் சேவைகள் அத்தகைய அடிப்படை வசதிகளற்ற மிகவும் பின்தங்கிய பிரதேசங்களுக்கு ஒரு வரப்பிரசாதம் எனலாம்.

# உள்ளூராட்சிமன்ற பிரதேசத்தை சுத்தமாக்க ஆளுநரின் வழிகாட்டலில் வேலைத் திட்டம்



ஆளுநரின் வழிகாட்டலில் உள்ளூராட்சி மன்றங்கள் சூழலை சுத்தமாக வைத்திருக்க விசேட வேலைத்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தலுள்ள ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் தமது பிரதேசங்களைச் சுத்தமாக வைத்திருக்க விசேட வேலைத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் எனும் ஆளுநரின் வழிகாட்டலுக்கமைவாக இன்றைய தினம் தமது விசேட வேலைத் திட்டங்களை நல்லூர் மற்றும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைகள் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் ஆரம்பித்தன.

நேற்று (21) காலை 7 மணியளவில் நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட திருநெல்வேலிச் சந்தியிலே கழிவுத் தொட்டிகள் வைக்கும் நிகழ்வு ஆளுநரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து காலை 7.30 மணியளவில் வலிகாமம் கிழக்கு பிரதேசசபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் 1000 மரங்களை நடும் நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது மரம் செம்மணிச் சந்தியிலே ஆளுநரால் நட்டு வைக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்த வேலைத் திட்டங்கள் ஆளுநரின் வழிகாட்டலுக்கமைவாக அந்தந்த பிரதேசங்களிலுள்ள பொதுமக்களுடன் இணைந்தே செயற்படுத்தப்படவுள்ளன.

அந்த வகையில் கழிவுத் தொட்டிகளை வைக்கும் நிகழ்ச்சித் திட்டத்திலே கழிவுத் தொட்டிகளுக்கு பொறுப்பாக கடை வியாபாரிகள் செயற்படவுள்ளனர்.

அதே போல் இந்த வேலைத் திட்டங்கள் முழுவதும் பொது மக்களின் ஒத்துழைப்போடு அவர்களுடன் இணைந்து செயற்படுவதாகவே காணப்படும் என்று உள்ளூராட்சித் திணைக்களம் கூறியுள்ளது.

# கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இருவருக்கும் விளக்க மறியல்

(றிபாஸ்)

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இரு நபர்களை 31 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி கே.சமீம் உத்தரவிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாகாமம், வீதியில் கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 750 மில்லி கிராம் கஞ்சாவும் அட்டாளைச்சேனையில் பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 45மில்லி கஞ்சாவும், 90 மில்லிகிராம் ஐஸ்போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சந்தேக நபர்கள் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம். சதாத் தலைமையில் பொலிஸ் சாஜன்களான தாஹீர், அனஸ் ஆகியோர் குறித்த பிரதேசத்துக்குச் சென்று நபர்களை கைது செய்தனர். நேற்று முன்தினம் (20) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே சந்தேக நபர்களுக்கு இந்த விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரனைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணவர்களுக்கு போதைக்கு உட்படுத்துவோர் மீது நடவடிக்கை

பாடசாலை மாணவர்களை போதைப் பொருள் பாவனைக்கு உட்படுத்தும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளுக்கு அருகில் போதைப் பொருட்களை விற்பனை செய்வோர் தொடர்பில் பொலிஸார் மிகவும் கண்காணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான நபகர்களிடமிருந்து தமது பிள்ளைகளை பாதுகாக்கும் விடயத்தில்பெற்றோர்முக்கியகவனம்செலுத்த வேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கேட்டுள்ளார். இவ்வாறான நபர்கள் அல்லது குழுக்கள் தொடர்பில் பொலிஸாருக்கு தெரியப்படுத்துமாறு அவர் பொது மக்களை கேட்டுள்ளார்.

# முன்மாதிரியான அரச உத்தியோகத்தருக்குக் கௌரவம்

(அ.அஸ்வர்)

முன்மாதிரியான சிறந்த அரச உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

ட்ரான்பேரன்சி இன்டநெஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் உதவி கோரிவரும் மக்களுக்காக கால நேரம் பாராது சேவையாற்றிய அரச உத்தியோகத்தர்கள் நேர்மைக்கு மகுடம் எனும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டனர்.




இவர்களுள் மிகத் திறமையான ஐவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு கௌரவமளிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் கோப்பாய் பிரதேச செயலாளர் சுபாசினி மதியழகன், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் டபிள்யு. ஏ.நிஸங்க, வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் யசோதா உதயகுமார், எல்பிட்டிய ஆதார வைத்தியசாலையின் தாதி உத்தியோகத்தர் திருமதி பிரதிபானி, அம்பலாங்கொட மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் நளின் பிரசன்ன விஜேசேகர ஆகியோர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# தமிழக மீனவர்கள் மீது தாக்குதல்:

# இலங்கை கடல் கொள்ளையர்களை கைது செய்யுமாறு ராமதாஸ் கோரிக்கை!



நாகை மாவட்டம் வேதாரண்யம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மீது தாக்குதல் நடத்திய இலங்கை கடல் கொள்ளையர்கள் மீது வழக்குப் பதிவு செய்து, கைது செய்து கடுமையான தண்டனை வழங்குவதற்கு மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வங்கக்கடலில் மீன் பிடிக்கச் சென்ற நாகை மாவட்டம் வேதாரண்யம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கை கடல் கொள்ளையர்கள் கொலைவெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ஆறுகாட்டுத்துறைக்கு மிக அருகில் இந்திய கடல் எல்லைப் பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அரிவாள், கத்தி உள்ளிட்ட ஆயுதங்களால் வெட்டியும், இரும்புக் கம்பி, கட்டை ஆகியவற்றால் அடித்தும் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 11 மீனவர்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

இதனால், 5 மீனவர்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மீனவர்களிடமிருந்து 10 லட்சம் ரூபா மதிப்புள்ள மீன்பிடி உபகரணங்களையும், மீன்களையும் கொள்ளையடித்துள்ளனர். கடல் கொள்ளையர்களின் இந்த தாக்குதல் கண்டிக்கத்தக்கது.

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடல் கொள்ளையர்கள் தாக்குதல் நடத்துவது அண்மைக்காலமாக அதிகரித்திருக்கிறது. கடந்த 10 ஆம் திகதி நள்ளிரவிலும் இதே பகுதியில் வேதாரண்யம் பகுதி மீனவர்கள் மீது இலங்கை கடல் கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தி பொருட்களை கொள்ளையடித்துச் சென்றனர்.

அதனால் ஏற்பட்ட அச்சமும், பதற்றமும் விலகும் முன்பே இலங்கைக் கடல் கொள்ளையர்கள் அடுத்தத் தாக்குதலை நடத்தியிருக்கின்றனர். இதனால் உடலளவிலும், மனதளவிலும் பாதிக்கப்பட்டுள்ள நாகை மாவட்ட மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல லவே அஞ்சுகின்றனர்.

இலங்கை கடற்படையினர் மற்றும் இலங்கைக் கடல் கொள்ளையர்களால் தமிழக மீனவர்கள் தொடர் ந்து தாக்குதலுக்கும், கைது நடவடிக்கை களுக்கும் ஆளாவதை மத்திய, மாநில அரசுகள் இனியும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. இனியும் அமைதி காத்தால் தமிழக மீனவர்கள் மீதான கடல்கொள்ளையர்கள் மற்றும் இலங்கை படையினரின் அத்துமீறல்கள் அதிகமாகி விடும். இது இந்தியாவின் இறையாண்மைக்கும் பெரும் அச்சு றுத்தலாக அமைந்து விடும்.

உலகின் மிக பயங்கரமான கடல் கொள்ளையர்களாக கருதப்படும் சோமாலியா கடற்கொள்ளையர்களையே ஒடுக்கிய பெருமை இந்திய கடற்படைக்கு உண்டு. அவர்களுடன் ஒப்பிடும் போது இலங்கை அரசின் ஆதரவுடன் செயல்படும் இலங்கை கடல் கொள்ளையர்கள் மிகச் சாதாரணமானவர்கள். அவர்களின் தொடர் அட்டகாசத்தை இந்திய அரசு அனுமதிக்கக் கூடாது என்று குறிப்பிட் டுள்ளார்.

# சந்திராயன் -03 விண்கலத்தின் நாளை நிலவில் தரையிறங்கிறது!



நிலவின் தென்துருவத்தை ஆய்வு செய்வதற்காக சென்றுள்ள இந்தியாவின் சந்திராயன் -03 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் நாளை நிலவில் தரையிறங்கவுள்ளது.

இலங்கை நேரப்படி நாளை மாலை குறித்த லேண்டர் நிலவில் தரையிறங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோவினால் அனுப்பப்பட்ட,சந்திராயன் 02 விண் கலத்தின் லேண்டர் பகுதி நிலவில் தரையிறங்கும் போதே, அந்த திட்டம் தோல்வியடைந்திருந்தது.

எனினும் இந்த திட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்டுள்ள நேர்த்தி யான வடிவமைப்பு காரணமாக நிலவில் தரையிறங்கும் பணிகள் வெற்றி யடையும் என இஸ்ரோ நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இவ்வாறு விக்ரம் லேண்டர் நில வில் தரையிறங்கும் காட்சிகளை நேரலையாக வழங்கவுள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

இந்தியாவுக்கு போட்டியாக ரஷ்யா அண்மையில் அனுப்பிய லூனா -25 திட்டம் தோல்வியடைந்திருந்தது.

இந்தநிலையில், குறித்த திட்டத்தில் வெற்றியடைந்தால் நிலவின் தென் துருவத்திற்கான ஆய்வில் வெற்றிக் காணும் முதல் நாடாக இந்தியா வர லாற்றில் இடம்பெறும் என்பது குறிப் பிடத்தக்கது.

## 'பழனிசாமி துரோகத் தமிழர்'

பழனிசாமிக்கு துரோகத் தமிழர் பட்டம் கொடுக்கலாம் என அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் தெரிவித்தார்.

தஞ்சாவூரில் நேற்று செய்தியா ளர்களிடம் டி.டி.வி.தினகரன் கருத்து தெரிவிக்கையில், மதுரையில் பழனி சாமி நடத்தியது எழுச்சி மாநாடு இல்லை. வீழ்ச்சி மாநாடாகும். அந்த மாநாட்டில் அதிகபட்சமாக 2.50 லட்சம் பேர் தான் கலந்துகொண்டுள்ளனர்.

பழனிசாமிக்கு புரட்சி தமிழர் என்ற பட்டம் வழங்கியுள்ளனர். இதனால் புரட்சி என்ற வார்த்தைக்கே மரியாதை இல்லாமல் போய் விட்டது. அவருக்கு துரோகத் தமிழர் என்று பட்டம் கொடுக் கலாம். தான் செய்த துரோகத்தாலும், தவறாக ஈட்டிய பணப் பலத்தாலும், கட்சியை கபளீகரம் செய்ததுதான் அவர் செய்த புரட்சி. முதல்வர் ஸ்டாலி னுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் பழனி சாமிக்கும் எந்த வேறுபாடும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

# 2020 இல் தேர்தலை தடுப்பதற்கு முயற்சி: குற்றச்சாட்டை எதிர்கொள்வதற்கு தயார் என்கிறார் டொனால்ட் ட்ரம்ப்!

கடந்த 2020 ஆம் ஆண்டு தேர்தலை தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார் என சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை எதிர்கொள்வதற்கு தயார் என்று அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், எதிர் வரும் வியாழக்கிழமை ஜோர்ஜியா நீதிமன்றத்தில் முன்னிலையாகவுள்ளேன் என தெரிவித்துள்ளார்.

ஜோர்ஜியா மாநிலத்தில் தம்மீது சுமத்தப்பட்ட குற்றசாட்டுக்கள் உண்மைக்கு புறம்பானவை என டொனால்ட் ட்ரம்ப் முன்னதாக அறிவித்திருந்தார்.

கடந்த சில மாதங்களில் அவர் மீது சுமத்தப்பட்ட நான்காவது குற்றவியல் வழக்கு இதுவாகும் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உட்பட மேலும் 18 பேர் குறித்த வழக்குகளில் குற்றவாளியாக குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

இதன்படி, 19 குற்றவாளிகளுக்கும் எதிராக மொத்தமாக 41 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது.

## தாய்லாந்து முன்னாள் பிரதமருக்கு சிறைத்தண்டனை!

தாய்லாந்து முன்னாள் பிரதமர் தக்சின் ஷினவாத்ராவுக்கு ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பான 8 வருட சிறைத்தண்டனையை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2001 முதல் பிரதமராக பதவி வகித்த தக்சின் ஷினவாத்ரா, 2006 ஆம் ஆண்டு இராணுவத்தினால் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டார்.

அதன்பின் அவர் நாட்டிலிருந்து வெளியேறினார். இந்த நிலையில் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவருக்கு 8 வருட சிறைத்தண்டனை விதித்து தாய்லாந்து நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இந்நிலையில், தாய்லாந்தில் தக்சின் ஷினவாத்ராவின் கட்சி ஆட்சிப்பொறுப்பை ஏற்கக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், அவர் இன்று நாடு திரும்பினார்.

அதன்பின் அவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதோடு, 8 வருட சிறைத்தண்டனையை விதித்து தாய்லாந்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ஏழு குழந்தைகளை கொலை செய்த தாதிக்கு ஆயுள் தண்டனை விதிப்பு!





பிரித்தானியாவில் ஏழு குழந்தைகளை கொலைசெய்தார் என்ற குற்றத்துக்காகவும் மேலும் ஆறு குழந்தைகளை கொலை செய்ய முற்பட்டமைக்காகவும் லூசி லெட்பை என்ற தாதிக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான கொலைகள் மிகவும் கொடூரமான செயல் என தண்டனை வழங்கிய நீதிபதி தெரிவித்துள்ளார்.

தண்டனை காலத்தில் எந்த கட்டத்திலும் இவருக்கு தற்காலிக பிணை வழங்கப்படமாட்டாது எனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்த கொலைகளை செய்த லூசி லெட்பை தண்டனை வழங்கப்படும் போது நீதிமன்றில் முன்னிலையாக மறுத்துள்ளார்.

இந்த நிலையில், குற்றவாளிகள் தண்டனை வழங்கப்படும் போது நீதிமன்றத்தில் முன்னிலையாவது கட்டாயமாக்கப்பட வேண்டும் என பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.


குறித்த சட்டத்தினை மாற்றுவதற்கான உரிய நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை, மருத்துவ தாதிக்கு சட்ட ஆலோசனை வழங்க சட்டதரணிகள் முன்வர மறுத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவர்களுக்கு ஆளில்லா விமானங்களை இயக்குவதற்கு பயிற்சி!

ரஷ்யாவில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு ஆளில்லா விமானங்களை இயக்குவதற்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

இதன்படி 15 முதல் 17 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்களுக்கே இவ்வாறு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைனுக்கு எதிரான போரினை அடிப்படையாக கொண்டு இந்த நடவடிக்கையினை ரஷ்யா முன்னெடுத்துள்ளது.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949